பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

07-08-2025 6.30 PM

**மாநிலச் செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

1. கைத்தறித்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தேர்தல் ஆணையத்துக்கு எதிராக எதிர்க்கட்சிகள் குற்றச்சாட்டுகளை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

3. தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதாக மாநில அமைச்சர் திரு ரகுபதி கூறியுள்ளார்.

4. மாநிலத்தில் சேதமடைந்த தடுப்பணைகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை திமுக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி வலியுறுத்தியுள்ளது.

5. பள்ளிகளுக்கு இடையேயான உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள் -

<<<<<<<>>>>>>

கைத்தறித்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கம் அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

தேசிய கைத்தறி தினம் இன்று கொண்டாடப்படுவதையொட்டி விடுத்துள்ள செய்தியில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

கைத்தறிப் பொருட்களின் ஏற்றுமதி 21 ஆயிரம் கோடி ரூபாயை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மாதம் ஒலிபரப்பான மக்களிடையே மனம் திறந்து பேசும் மன் கி பாத் நிகழ்ச்சியிலும் பிரதமர் கைத்தறி தினம் கொண்டாப்படுவதை குறிப்பிட்டு பேசினார்.

*(Sound Byte – பிரதமர் –58 Sec.)*

இதற்கிடையே, தமிழகத்தை சேர்ந்த விவசாயிகளுடன் இன்று கலந்துரையாடியதாக பிரதமர் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் தமிழில் இதுகுறித்து பதிவிட்டுள்ள அவர், உற்பத்தித்திறனை ஊக்குவிக்கவும். வேளாண் தொழில்நுட்பங்களை பயன்படுத்துவதிலும் அவர்களின் அனுபவம் குறித்து கேட்டறிந்ததும் உற்சாகம் அளிப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>

தேர்தல் ஆணையத்தின் மீது மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராகுல்காந்தி குற்றச்சாட்டுகளை தெரிவிப்பது ஏற்புடையது அல்ல என்று மத்திய அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

செய்தி நிறுவனத்துக்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், கடந்த மக்களவைத் தேர்தலில் திரு ராகுல்காந்தி எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டார் என்று வினவினார்.

தேர்தலில் தோல்வியடையும்போது தேர்தல் ஆணையத்துக்கு எதிராக குற்றச்சாட்டுகளை தெரிவிப்பது தவறானது என்றும் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

கலாச்சாரத்துறைக்கான நிதி ஒதுக்கீடு தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

மாநிலங்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கடந்த நிதியாண்டில் 3 ஆயிரத்து 260 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக கூறினார்.

நடப்பு நிதியாண்டில் இது 3 ஆயிரத்து 360 கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் 7-ஆம் ஆண்டு நினைவுதினம் இன்று அனுசரிக்கப்பட்டது.

இதனையொட்டி, சென்னையில் நடைபெற்ற அமைதி பேரணியில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மற்றும் திமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படுவதாக மாநில அமைச்சர் திரு ரகுபதி கூறியுள்ளார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், குற்றங்களில் ஈடுபடுவோர் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டார்.

இதன் காரணமாக குற்றவாளிகள் சட்டத்தின்முன் நிறுத்தப்பட்டு தண்டனை கிடைப்பது உறுதி செய்யப்படுவதாகவும் திரு ரகுபதி தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

தமிழகத்தில் சேதமடைந்த தடுப்பணைகளை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை திமுக அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் விடுத்துள்ள அறிக்கையில், திருச்சி மாவட்டம் அழகிரிபுரம் அருகே கொள்ளிடம் ஆற்றில் கடந்த ஆண்டு ஏழு கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்ட தடுப்பணை தற்போது சேதமடைந்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை சீர் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை திமுக அரசு மேற்கொள்ளவில்லை என்றும், இதற்காக அப்பகுதி விவசாயிகள் ஆற்றில் இறங்கி போராடும் காணொளி மிகுந்த வேதனை அளிப்பதாக அவர் கூறியுள்ளார்.

மாநிலம் முழுவதும் கிடப்பில் போடப்பட்டுள்ள தடுப்பணை திட்டங்களை செயல்படுத்தவும் திமுக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று திரு நயினார் நாகேந்திரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>

குடியரசு துணைத்தலைவர் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியது.

மனுக்களை தாக்கல் செய்ய வரும் 21-ஆம் தேதி கடைசி நாளாகும்.

அதற்கு மறுநாள் மனுக்கள் மீதான பரிசீலனை நடைபெறும்

மனுக்களை விலக்கிக்கொள்ள 25-ஆம் தேதி கடைசி நாளாகும்.

போட்டி இருக்கும் பட்சத்தில் அடுத்த மாதம் 9-ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறும்.

வாக்குப்பதிவு முடிந்தவுடன் வாக்கு எண்ணிக்கையும் அன்றைய தினமே மேற்கொள்ளப்படும்.

இதற்கிடையே, குடியரசு துணைத்தலைவர் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை தேர்வு செய்வதற்கான அதிகாரம் பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.

இன்று புதுதில்லியில், தேசிய ஜனநாயக கூட்டணி கட்சித் தலைவர்கள் பங்கேற்ற கூட்டத்தில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

<<<<<<<>>>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த ஆறு தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

_(Sound Byte – செந்தாமரை கண்ணன் 60 Sec.)_

<<<<<<<>>>>>>

## _மாவட்டச் செய்திகள்_

மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைப்புசாரா ஓட்டுநர்கள் நல வாரியத்தில் பதிவு செய்துள்ள ஒன்பது பெண்களுக்கு

ஆட்டோ ரிக்ஷா வாகனங்களை மாநில அமைச்சர் திரு பழனிவேல் தியாகராஜன் இன்று வழங்கினார்.

-----------------

திருப்பூரில் தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு, நெசவாளர்களின் கைத்தறி துணிரகங்கள் கண்காட்சியை ஆட்சியர் திரு Manish Narnaware தொடங்கிவைத்தார்.

-------------------

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் 50 சதவீத மானியத்தில், மின்சாரத்தால் இயங்கும் புல் நறுக்கும் கருவிகளை ஆட்சியர் திரு பிரசாந்த் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

------------

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் ஆயிரத்து 30 கிலோ தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

-------------------

கோவையில் கைத்தறி ஆடைகள் அணிவதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

------------------

கோவை குற்றாலத்தில் சுற்றுலாப்பயணிகள் குளிப்பதற்கு இன்று முதல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

--------------

*சென்னை பெருநகர காவல்துறை சார்பில், போதைப்பொருள் பயன்பாட்டுக்கு எதிரான விழிப்புணர்வு முகாம் ஆலந்தூரில் உள்ள தனியார் கல்லூரியில் இன்று நடைபெற்றது.*

------------------

*சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ஆறு வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நாளை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

---------------

*சுதந்திர தினத்தையொட்டி, சென்னை சென்ட்ரலில் இருந்து போதனூருக்கு வரும் 14-ஆம் தேதியும், மறு மார்க்கத்தில் வரும் 17-ஆம் தேதியும் சிறப்பு ரயில்கள் இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே கூறியுள்ளது.*

*<<<<<<<>>>>>>*

*விளையாட்டுச் செய்திகள்*

***பள்ளிகளுக்கு இடையேயான உலக செஸ் சாம்பியன் போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றது.***

***அமெரிக்காவின் Virginia -வில் நடைபெற்ற இப்போட்டியில் சென்னை வேலம்மாள் வித்யாலயா பள்ளி இப்பதக்கத்தை கைப்பற்றியது.***

----------------

***இலங்கை சர்வதேச ஜுனியர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Dhyan Santosh இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.***

*19 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 21-15, 21-12 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Sainachiketh Bhatraju -ஐ வென்றார்.*

*மகளிர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் Aadhira Rajkumar 21-14, 21-18 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Prashansa Bonam-ஐ வென்றார்.*

*-------------------*

*தாய்லாந்து சர்வதேச பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Abhinav Thakur காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*--------------*

*உலக விளையாட்டுப்போட்டி சீனாவின் Chengdu-ல் இன்று தொடங்கியது.*

*வில்வித்தை போட்டியின் தரவரிசை சுற்றில் இந்தியா முதலிடத்தை பிடித்தது.*

*---------------*

*ஜெய்பூரில் நடைபெற்றுவரும் சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் தன்வி கண்ணா இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.*

*---------*

*இந்தோனேஷியாவில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சசிகுமார் முகுந்த் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*<<<<<<<END>>>>>>*